‘திராவிட மாடல்’ ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி குறித்து நாளேடுகள் வழங்கும் நற்செய்திகள்!

THE HINDU

Double-digit growth: T.N. will lead South Asia, says Stalin

After Tamil Nadu achieved a growth rate of 10.83% for 2025-26, Chief Minister M.K. Stalin on Tuesday said the State was able to achieve double-digit growth for the second consecutive year, clearly showing that it was not competing merely within India. "Tamil Nadu will lead South Asia," the Chief Minister said in a social media message. "We built the foundation in three years and delivered two consecutive years of double-digit growth," he added. Mr. Stalin said the progress was powered by the people of Tamil Nadu. "Our thanks for your work and trust. This is only the beginning. With your support, the climb will accelerate," the Chief Minister said.

THE NEW INDIAN EXPRESS

TN logs double-digit growth riding on agri sector

EXPRESS NEWS SERVICE @Chennai

TAMIL Nadu has clocked a double-digit economic growth for the second year in a row by recording 10.83% expansion in 2025-26. The state's agriculture and allied sector, which saw a minor contraction of -0.09% in 2024-25, has recorded a robust growth of 9% in 2025-26.

Referring to the report of the Union Ministry of Statistics and Programme Implementation, Chief Minister M K Stalin on Tuesday said the accomplishment was "just the beginning" and many achievements would follow with people's support.

Although comparable data for other states are not available, the 10.83% growth is almost 3.5 percentage points higher than the national average of 7.4%. In 2024-25, Tamil Nadu had registered a growth of 11.19%.

Tamil Nadu, the second-largest state economy in the country, reported a Gross State Domestic Product (GSDP) of ₹31.29 lakh crore in 2025-26, as against ₹31.19 lakh crore in 2024-25. Per capita income stood at ₹4.08 lakh. In a post on X, Stalin said the state had built the foundation over three years and delivered two consecutive years of double-digit growth. "Thanks to the people of Tamil Nadu for supporting our excellent administration and hard work. This is just the beginning. With your support, we are sure to reach many more heights," the CM said in his post. "In its pursuit of excellence, Tamil Nadu's competition was not with other Indian states. TN should rise as a leading state in south Asia," he said.

Industries Minister TRB Rajaa said in a post on X, "Not noise. Not propaganda. Just plain factual numbers. While some are busy dividing people, TN is busy multiplying prosperity. This is what happens when governance is driven by industry first policies, social justice and state leadership under CM MK Stalin." Let this be clear the Dravidian Model does not just speak, it delivers, the minister added.

DECCAN Chronicle

State clocks double digit growth for second year

Tamil Nadu records 10.83 per cent growth in 2025-26

G. BABU JAYAKUMAR, D. SEKAR | DC
CHENNAI, APRIL 28

Exultant over Tamil Nadu clocking 10.83 per cent growth in 2025-26, close on the heels of the 11.19 per cent recorded in the previous year, Chief Minister M.K. Stalin said the Dravidian Model was distinct and that it had been proven in numbers.

The state's GSDP reached ₹35.29 lakh crore at current prices with per capita income at Rs 4.08 lakh, which is only second to Karnataka, and the trend could push the state towards the goal set by the DMK government of becoming a US $ 1 trillion economy by 2030, outpacing India's 7.4 per cent national average.

"We built the foundation in three years. Delivered two consecutive years of double-digit growth," Mr Stalin said in his message on X and thanked the people of Tamil Nadu for their work and trust, attributing the progress to them.

"It is only the beginning. With your support, the climb would accelerate and Tamil Nadu is not competing within India but would lead South Asia," he said.

Finance minister T.R.B. Rajaa said the two-digit growth for two years in a row was achieved without propaganda. They were just plain factual numbers of 10.83 per cent growth in 2025-27 following the 11.10 per cent recorded in the previous year, leaving the national average of 7.4 per cent far, far behind, he said.

While some were busy dividing people, Tamil Nadu was busy multiplying prosperity and it happened because governance in the state was driven by industry-first policies, social justice and a stable leadership under the Chief Minister, he said.

Chief Minister M.K. Stalin cycles near the Kodaikanal Lake post the election campaigns for the state Assembly elections in Kodaikanal on Tuesday.

தினமணி

மக்கள் துணையுடன் பல உயரங்களை அடைவது உறுதி

முதல்வர் மு.க.ஸ்டாலின்

தொடர்ச்சியாக 2வது நிதியாண்டிலும்

தமிழகம் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி

THE TIMES OF INDIA

Stalin, ministers laud Tamil Nadu's double-digit economic growth

This Is Second Consecutive Year, Report Says

Tamil Nadu clocks 10.83% growth in 2025-26 financial year following the 11.19% recorded in the previous year, leaving the national average of 7.4% far behind, said industries minister T R B Rajaa

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

பொருளாதார வளர்ச்சி 10.83 சதவீதமாக பதிவு

தமிழ்நாடு 2 ஆண்டுகளாக இரட்டை இலக்க வளர்ச்சி என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளது

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

தினகரன்

2-வது ஆண்டாக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி

14 ஆண்டுகளுக்கு பின்பு தொடரும் தமிழகத்தின் சாதனை

இந்து தமிழ் திசை

திருமயம் - ஆலங்குடி- அறந்தாங்கி தொகுதிகளில்

வாக்களித்த பொதுமக்களுக்கும், உழைத்த உடன்பிறப்புகளுக்கும் நன்றி!

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, ஏப். 30 -

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கவும், மாநிலத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவும் உறுதுணையாக நின்று, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த பொதுமக்களுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

“நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் திருமயம் சட்டமன்ற தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்ட நான் (எஸ்.ரகுபதி) வெற்றியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டேன். ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்போட்டியிட்டார். அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் சார்பில் எஸ்.டி.ராமச்சந்திரன் கை சின்னத்தில் போட்டியிட்டார்.

3 வெற்றி வேட்பாளர்களுக்கும் வாக்குகள் அளித்துள்ள வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தேர்தல் களத்தில் வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்டு, பசி, தூக்கம் பாராமல் அயராது உழைத்த கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும், தோழர்களுக்கும் எனது அன்பையும், நன்றியையும் உரித்தாக்குகிறேன். இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை- விராலிமலை- கந்தர்வக்கோட்டை தொகுதிகளில்

வாக்களித்த பொதுமக்களுக்கும், உழைத்த உடன்பிறப்புகளுக்கும் நன்றி!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை, ஏப். 30 -

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கவும், மாநிலத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவும் உறுதுணையாக நின்று, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த பொதுமக்களுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

“நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் கழக வெற்றி வேட்பாளராக போட்டியிட்ட நான் (கே.கே.செல்லப்பாண்டியன்) வெற்றியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டேன்.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கழக வெற்றி வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் டாக்டர் வை.முத்துராஜா போட்டியிட்டார். கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் சார்பில் எம்.சின்னத்துரை போட்டியிட்டார்.

3 வெற்றி வேட்பாளர்களுக்கும் வாக்குகள் அளித்துள்ள வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தேர்தல் களத்தில் வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்டு, பசி, தூக்கம் பாராமல் அயராது உழைத்த கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும், தோழர்களுக்கும் எனது அன்பையும், நன்றியையும் உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தெரிவித்துள்ளார்.

வெங்காயம் உடல் வெப்பத்தை தணிக்கும் என ஒன்றிய பா.ஜ.க. அமைச்சரின் சர்ச்சைப் பேச்சு!

மருத்துவர்கள் கண்டனம்!

போபால், ஏப்.30-

மத்திய பிரதேச மாநிலம் பிச்சோரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய ஒன்றிய தொலைதொடர்புத் துறை அமைச்சர் ஜோதிர்ராத்திய சிந்தியா, 124 டிகிரி பாரன்ஹிட் வெயில் அடிச்சாலும், தனது காரில் ஏசி போட்டு பயணிப்பதில்லை என்றும், பாக்கெட்டில் ஒரு பெரிய வெங்காயத்தை வைத்திருந்தாலேஉடம்பு குளிர்ச்சியாக இருக்கும் என்றும் கூறினார். அமைச்சரின் இந்த பேச்சு சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள மருத்துவர்கள், வெங்காயத்தைப் பாக்கெட்டில் வைப்பதற்கும், உடல் வெப்பநிலையை ஒழுங்குபடுத்துவதற்கும் அறிவியல் பூர்வமான சம்பந்தம் இல்லை என்றும், உடலை குளிர்ச்சியாக வைக்கத் தண்ணீர் குடிப்பது, பருத்தி ஆடைகள் அணிவது மற்றும் வெயில் காலத்தில் வெளியே போகாமல் இருப்பது போன்ற வழிகளைப் பின்பற்றினால் போதும் என்று தெரிவிக்கின்றனர்.

தென்னக ரயில்வேயில்

ஆதரவின்றி தவித்த 556 பயணிகள் மீட்பு!

ரயில்வே அதிகாரிகள் தகவல்!

சென்னை, ஏப்.30-

சென்னை கோட்டத்துக்கு உட்பட்ட ரயில்வே வளாகத்தில், கடந்த ஓர் ஆண்டில் கைவிடப்பட்ட அல்லது ஆதரவின்றி தவித்த 556 பயணிகள் மீட்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: கடந்த நிதியாண்டில் (2025-26), சென்னை ரயில்வே கோட்டத்துக்கு உட்பட்ட ரயில் நிலையங்கள், ரயில்வே வளாகத்தில் ஆதரவின்றி தவித்த மற்றும் கைவிடப்பட்ட 227 பெண்கள் உள்பட 556 பயணிகளை ஆர்பிஎஃப் போலீஸார் மீட்டனர்.

இதில் சிறுவர்கள், முதியவர்களும் அடங்குவர். சிறுவர், சிறுமியர்களை குழந்தைகள் நல உதவி மையங்களிலும், பெரியவர்களை தொண்டு நிறுவனங்களிலும் ஒப்படைக்கப்பட்டனர்.

‘ஆப்ரேஷன் சேவா’ கீழ், சென்னை ரயில்வே கோட்டத்தில் பல்வேறு ரயில்களில் பயணத்தின் போது, உடல் நலம் பாதிக்கப்பட்ட 1,125 பயணிகளுக்கு முதலுதவி அளித்து, போதிய மருத்துவ உதவி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, ‘ஆப்ரேஷன் மாத்ருசக்தி’ கீழ், ரயில்களில் பயணத்தின் போதோ, ரயில் வளாகத்திலோ பிரசவ வலியால் துடித்த 8 கர்ப்பிணி பெண்களுக்கு தேவையான மருத்துவ உதவி அளிக்கப்பட்டுள்ளது.அதேபோல், பயணிகள் தவறவிட்ட ரூ.4.36 கோடி மதிப்பிலான சொத்துக்களை மீட்டு, உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

டிஜிட்டல் அரெஸ்ட் தொடர்பாக இந்தியாவில்

9,400 வாட்ஸ்அப் கணக்குகள் முடக்கம்!

உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய அரசு தகவல்!

புதுடெல்லி, ஏப்.30-

இந்தியாவில் அதிகரித்து வரும் “டிஜிட்டல் அரெஸ்ட்” மோசடிகளைத் தடுக்க, இந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை சுமார் 9 ஆயிரத்து 400 வாட்ஸ்அப் கணக்குகளை வாட்ஸ்அப் நிறுவனம் முடக்கியுள்ளதாக உச்ச நீதிமன்றத்தில் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. ஜனவரி 2026ல் தொடங்கிய, 12 வார சிறப்பு நடவடிக்கையில், டிஜிட்டல் கைது மோசடிகளுடன் தொடர்புடைய 9 ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட வாட்ஸ்அப் கணக்குகள் கண்டறியப்பட்டு, தடை செய்யப்பட்டுள்ளன. இந்த மோசடி கும்பல்கள் பெரும்பாலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து குறிப்பாக கம்போடியாவில் இயங்குவதும், போலி அடையாளங்களைப் பயன்படுத்தி மக்களை மிரட்டி பணத்தை பறிப்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக, உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய உள்துறை அமைச்சகம் தாக்கல் செய்த நிலை அறிக்கையில், இந்த தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வாட்ஸ்அப் மட்டுமல்லாமல், இந்த மோசடிகளுக்கு பயன்படுத்தப்பட்ட ஸ்கைப் கணக்குகளும், சிம் கார்டுகளும் முடக்கப்பட்டுள்ளன. சிபிஐ, போலீஸ் அல்லது சுங்கத் துறை அதிகாரி எனக்கூறி வாட்ஸ்அப் வீடியோ காலில் மிரட்டி பணம் பறிக்கும் டிஜிட்டல் அரெஸ்ட் மோசடிகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் சைபர் பிரிவு காவல்துறை தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வரும் காலங்களில்

பெட்ரோல் - டீசல் வாகனங்களுக்கு எதிர்காலம் கிடையாது!

ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி தகவல்!

புதுடெல்லி, ஏப்.30-

டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி, வாகன உற்பத்தியாளர்களுக்கு உயிரி எரிபொருட்கள், CNG, LNG மற்றும் மின்சார வாகனங்கள் போன்ற மாற்று எரிபொருட்களை நோக்கி திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

இறக்குமதி மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் ஆகிய அம்சங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவை தீவிரமான சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் ஹைட்ரஜன் எரிபொருள் சார்ந்த போக்குவரத்துக்கான முன்னோடித் திட்டங்களை ஏற்கனவே தொடங்கிவிட்டதாகவும் கட்கரி தெரிவித்தார். 10 வழித்தடங்களில் ஹைட்ரஜன் மூலம் இயங்கும் லாரிகள் மற்றும் பேருந்துகளை இயக்கி வருவதாகவும், ஹைட்ரஜன்தான் எதிர்காலத்தின் எரிபொருள் என்று குறிப்பிட்ட நிதின் கட்கரி, இதேபோன்று முக்கிய எரிபொருளாக எத்தனாலும் திகழ்வதாகவும் கூறினார். எனவே, வரும் காலங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் வாகனங்களுக்கு எதிர்காலம் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.